பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 06 செவ்வாய்க்கிழமை 21.07.2020 கதிர் 125

## சஜித் அணியின் மனு நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 21

ஐக்கிய தேசியக் கட்சியின் 99 பேரது உறுப்புரிமை தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த மனு இன்று சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றால்

2

# சிறிகாந்தா, கஜேந்திரகுமாருடன் பொது விவாதத்துக்கு நான் தயார்!

## சுமந்திரன் இன்று பகிரங்க அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 21

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் என்.சிறிகாந்தாவுடனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளரும் கட்சியின் தலைவருமான கஜேந்திரகுமாா பொன்னம்பலத்துடனும் பொதுவெளியில் பகிரங்க விவாதம் நடத்துவதற்கு நான் தயாராக உள்ளேன்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும், கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

2

## விமலின் மனைவிக்கு ஆப்பு; கைதுசெய்யுமாறு உத்தரவு!

கொழும்பு, ஜூலை 21

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸவைக் கைது செய்வதற்கான பிடியாணையை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

போலியான ஆவணங்கள் மூலம் கடவுச்சீட்டை மோசடியாகப் பெற்றதாகத் தெரிவிக்கப்படும் வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமை தொடர்பிலேயே சஷி

2

## நல்லூர் திருவிழாவில் இம்முறை பிரதிஷ்டை, அன்னதானம் தடை

### 300 பக்தர்களுக்கு மட்டுமே அனுமதி

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 21

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த திருவிழாவில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய 300 பக்தர்களை மட்டுமே வழிபாடுகளில் ஈடுபட அனுமதியளிக்க முடியும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2

## தமிழ் மக்கள் பயங்கரவாதிகளுமல்லர்; முஸ்லிம்கள் அடிப்படைவாதிகளுமல்லர்

### இணைந்து பயணித்தால் பல நன்மைகள் என்கிறார் பஷீர்

கொழும்பு, ஜூலை 21

தமிழ் மக்கள் பயங்கரவாதிகளுமல்லர்; முஸ்லிம் மக்கள் அடிப்படைவாதிகளுமல்லர் என்று முன்னாள் அமைச்சரும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2

## ஜனாதிபதி மாளிகைக்கு ட்ரோன் விட்ட ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 21

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் ட்ரோன் கமெரா ஒன்று, நேற்று இரவு 10.30 மணியளவில் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பைரவகந்த தனியார் விடுதியில் தங்கியிருந்தவாறு, கண்டி நகரை

2

## கடற்படை தாக்கி மீனவர் படுகாயம்!

### மன்னாரில் இன்று சம்பவம்



மன்னார், ஜூலை 21

மன்னார் கடலில் வைத்து கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில்

2

## காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் இன்று போராட்டம்

வவுனியா, ஜூலை 21

வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு முன்பாக சுழற்சிமுறை போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.



2



## நல்லூர் திருவிழாவில் இம்முறை ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் மாநகர பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

அங்கப்பிரதஷ்டை, காவடி, அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு முழுமையான தடை விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இன்று செவ்வாய்கிழமை நடந்த சிறப்பு அமர்வில் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்படி தீர்மானத்தை பதில் முதல்வர் அறிவித்தார்.

மேலும் அன்னதானம், வியாபார நிலையங்கள், தண்ணீர் பந்தல்கள் போன்றவற்றினையும் இம்முறை தடை செய்யப்படவுள்ளதாகவும் பதில் முதல்வர் மேலும் தெரிவித்தார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்கள் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மை மக்களுடைய பிரச்சினைகளை சரியாகக் கையாள்கின்ற வகையிலே ஒரு கூட்டு முன்னணியாகவும் செயற்பட நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அவ்வாறானநிலையில், பெரும்பான்மையாகவும் சிறுபான்மையாகவும் இருக்கின்ற மக்களுக்குள் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் கட்சிகளோடும் நாங்கள் இணைந்து செயலாற்றுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

அரசியலிலே பகிரங்கமான மேடைகள் என்றும், இரகசியமான மேடைகள் என்றும் இரண்டு மேடைகள் இருக்கின்றன. பரகசியமான மேடைகள் என்பது வெறும் கூக்குரலாக - ஒப்பாரியாக இருப்பதைத்தான் நாங்கள் பார்க்கின்றோம். உண்மையில் இரகசியமான மேடையில் பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த இரகசியமான மேடையில் நிமிர்ந்த குரலாக நாங்கள் இருப்போம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் எப்போதும் பெரும்பான்மை சமூகத்தினரோடு பேசி வருவது வெறுமனே ஒரு பிரசாரத்துக்காகவே. வெளியிலே மக்கள் எங்களைக் கை கொட்டி ஆரவாரிக்க வேண்டுமென்ற அரசியலை நாங்கள் ஒரு போதும் செய்வதில்லை.

இவற்றைக் கைவிட்டுவிட்டுத் தான் புதிதாக கிடைத்த அனுபவத்தின் அடிப்படையிலும் சுமார் 35 ஆண்டுகள் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையிலும் புதிதான வரைவுகளைச் செய்து கொண்டு புதிய சூழ்நிலைக்கு ஏற்ற வகையிலே அரசியலை முன்னெடுத்து வருகின்றோம். அந்தத் தருணங்களில் அந்த அரங்கத்தில் சிறுபான்மை மக்களிடையே குரலாக இருப்போம் - என்றார்.

## ஜனாதிபதி மாளிகைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படம் பிடிப்பதற்காக அனுப்பப்பட்ட ட்ரோன் கமெராவே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

இதனையடுத்து உக்ரைன் நாட்டைச்சேர்ந்த 36 வயதுடைய சுற்றுலாப் பயணி ஒருவரை கண்டி சுற்றுலாப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## காணாமற்போனோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுழற்சி முறையிலான போராட்டம் இன்றுடன் ஆயிரத்து 250ஆவது நாளினை எட்டுவதையிட்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த உறவினர்கள், கடந்த ஆயிரத்து 250 நாள்களாக நாம் போராடி வருவதாகவும் தமக்கான தீர்வைத் தருமாறு வெளிநாடுகளிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கக் கொடிகளை ஏந்தியிருந்தமையுடன் கோசங்களையும் எழுப்பினர்.

## சஜித் அணியின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 25ஆயிரம் ரூபா வழக்குச் செலவையும் செலுத்தவேண்டும் என்று மனுதாரரான ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து 99 பேரை இடை நீக்கியமைக்கு எதிராக முன்னதாக இடைக்காலத் தடையை விதிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மறுப்பு தெரிவித்திருந்தது.

இதனையடுத்தே இந்த மறுப்பை ஆட்சேபித்து ரஞ்சித் மத்துமபண்டார கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடற்படை தாக்கி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகிமன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார், பிரதான பாலத்துக்கு அருகில் இருந்து இன்று காலை மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர்கள் சிலர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து சிறிது நேரம் மன்னார் பாலத்தடி கடற்கரையில் மீனவர்கள் ஒன்று திரண்டு தமது கண்டனத்தை தெரிவித்தனர்.

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் உள்ள கடற்படைக் காவலரணில் இன்று காலை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதியுடன் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் தொழிலுக்குச் சென்ற படகு ஒன்றைக் கடலில் வைத்து இடைமறித்த சிவில் உடையில் இருந்த கடற்படையினர் ஆவணப் பரிசீலினைக்காக ஆவணங்களைக் கோரியுள்ளனர். ஆவணங்களை வழங்குவதற்கு முன்னரே கடற்படையினர் அந்தப் படகில் இருந்த மீனவர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

தாக்குதல்களுக்கு உள்ளான மீனவர்கள் சக மீனவர்களுக்கு தகவல் வழங்கியதோடு கடற்கரைக்குத் திரும்பினர். பின்னர் கடும் காயங்களுக்கு உள்ளான மீனவர் ஒருவர் உடனடியாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதையடுத்து மீனவர்கள் கடற்கரையில் ஒன்று கூடி தமது எதிர்ப்பை தெரிவித்த நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மன்னார் பிரதான பாலத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பகுதி வரை சுமார் மூன்று இடங்களில் தாங்கள் முழுமையாக சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் இதனால் தங்களால் உரிய நேரத்தில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் மீனவர்கள் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிகாரியுடனான கலந்துரையாடலின் பின்னர் சுமூக நிலை ஏற்பட்டதுடன் கடற்படையினரினால் தாக்கப்பட்டமை தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# அரசுக்கு விருப்பமே இல்லாத தீர்வை தமிழ்க் கூட்டமைப்பு கேட்க முடியாது!

## இப்படி சொல்கின்றார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 21

தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். அதற்காக அரசு விரும்பாத தீர்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கேட்க முடியாது.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலனறுவை மாவட்ட முதன்மை வேட்பாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி வழியில் தீர்வு கேட்டு பிரிவினையை ஏற்படுத்த முயல்வதை உடன் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சியே தீர்வு என்று வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அரசு பல தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துவிட்டது. இந்தநிலையில், சமஷ்டி முறைமையிலான தன்னாட்சி தீர்வை கூட்டமைப்பினர் கேட்பது எந்த வகையில் நியாயமானது? இப்படியான கொள்கையைக் கூட்டமைப்பினர் கைவிட வேண்டும்.

புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அந்தத் தீர்வு எந்த இனத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும். சகல இனத்தவர்களுக்கும் ஏற்றால்போல் அந்தத் தீர்வு வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டும். இதுவே எனது ஆசை. இது நிறைவேற வேண்டும் என்பதே எனது விருப்பம் - என்றார்.

## விமலின் மனைவி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரவன்ஸவுக்கு பிடியாணை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு இன்று கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேகநபரான சஷி வீரவன்ஸ மன்றில் முன்னிலையாகவில்லை. இதையடுத்து நீதிவான் இந்த உத்தரவை வழங்கினார்.

## சிறிகாந்தா, கஜேந்திர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவா மேலும் கூறுகையில் -

என்.சிறீகாந்தா தன்னுடன் விவாதம் செய்ய வருமாறு சவால் விட்டிருக்கின்றார். அதற்கு இன்று நான் பதிலளிக்க வேண்டும் எனவும் அவா கேட்டுள்ளார்.

அவருடைய சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன். பொதுவெளியில் நடுநிலையான நபர் ஒருவா முன்னிலையில் விவாதம் செய்வதற்கு நான் தயார். அதனை யாராவது ஒழுங்கமைப்பு செய்தால் அல்லது சிறீகாந்தாவே ஒழுங்கமைத்தால் கூடப் பரவாயில்லை. நான் அதற்குத் தயாராக இருக்கின்றேன் - என்றார்.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தன்னுடன் விவாதம் செய்ய சுமந்திரனுக்குத் தகுதியில்லை எனக் கூறிய கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் 4 தடவைகள் விவாதித்திருக்கின்றேன்.

விவாதத்திலிருந்து தப்பிப்பதற்காக நொண்டிச்சாட்டுக்களைகூறிக்கொண்டு ஓடுகின்றார். அவரை துரத்திப் பிடிக்கும் அவசியம் எமக்கில்லை. ஆனால் அவருடனும் விவாதம் செய்ய நான் தயாராக இருக்கிறேன். ஏற்கனவே 4 விவாதங்களில் கலந்து கொண்டிருக்கின்றேன் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir
பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்
☛ உதவி ஆசிரியர்
☛ ஒப்பு நோக்கர்கள்
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு
முக்கியத்துவம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெலிசறையில் வென்றவர்கள் கந்தக்காட்டில் கோட்டை விடுவரா?

கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்பில் முக்கியமான ஒரு கட்டத்தைத் தாண்டித் தனது தகைமையை நிரூபித்திருக்கின்றது இலங்கை.

கொரோனாத் தொற்று ஏற்பட்ட கடற்படையினர் அனைவரும் அதில் இருந்து மீண்டிருக்கின்றனர் என்ற செய்தி வரவேற்கத்தக்க ஒன்று.

கடற்படையினர் மீண்டமை மட்டுமல்ல, அவர்களும் அவர்களோடு சேர்ந்தவர்களுமாக சுமார் ஆயிரம் பேருக்கு ஏற்பட்ட கொரோனாத் தொற்று, அதற்கு அப்பால் அந்த நபர்கள் மூலம் அடுத்த கட்டத்துக்குப் பரவாமல் ஒரு மட்டத்தில் தடுத்துக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது ஓர் அருஞ் சாதனைதான்.

கடந்த ஏப்ரல் மாதம் அளவில் ஜா - எல, சுதுவெல்லப் பகுதியில் போதைக்கு அடிமையான ஒருவரைத் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தச் சென்ற கடற்படைச் சிப்பாய் ஒருவருக்கே அந்த நபர் மூலம் முதலில் கொரோனாத் தொற்று ஏற்பட்டதாக நம்பப்படுகின்றது.

இதன் பின்னர் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி வெலிசறை முகாமைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதே கொரோனாத் தொற்று கடற்படைக்குள் பரவியுள்ளமை தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து மெல்ல மெல்ல அது பரவி வெலிசறை கடற்படை முகாமில் பல பேருக்கும் தொற்று ஏற்பட, ஏப்ரல் 27 ஆம் திகதி அந்த முகாமே இழுத்து மூடப்பட்டது.

அன்று முதல் ஜீன் 23 வரை இரு மாதங்களுக்கு அந்த முகாம் மூடப்பட்டிருக்கையில் அந்த முகாமைச் சேர்ந்த 906 பேரும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள், அவர்களுடன் தொடர்புபட்டவர்கள் என 44 பேரும் தொற்றுக்குள்ளானமை அவதானிக்கப்பட அவ்வளவு பேரும் - 950 பேரும் - தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தவிரவும் இவர்களுடன் தொடர்புபட்டவர்கள் என்ற பெயரில் மேலும் பல நூற்றுக் கணக்கானோர் தனிமைப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, இரண்டு வார கால அவதானிப்புக்குப் பின்னர் - நோய்த் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்பு - விடுவிக்கப்பட்டனர்.

குணமடைந்த சிப்பாய்கள் கூட வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறிய போதிலும், சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய மேலும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு, அவதானிக்கப்பட்ட பின்னரே சமூகத்தில் கலப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி கடற்படையினர் ஊடாக சுமார் ஆயிரம் பேருக்குத் தொற்று ஏற்பட்ட போதிலும், அவர்களும், அவர்களுடன் தொடர்புபட்ட அனைவரும் சுற்றி வளைக்கப்பட்டு, அவதானிப்பு மற்றும் கண் காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டு, தேவையானோருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு, தொற்றுப் பரவலுக்கு வாய்ப்பில்லை என்ற நிலையிலேயே வெளியில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

கடற்படையையும் அதனைச் சூழவும் உள்ள பல நூற்றுக் கணக்கானோருக்குத் தொற்று ஏற்பட்ட போது அந்த அனைவரையும் சுற்றிவளைத்து, கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வந்து, மிகக் கவனமான - நுட்பமான - சோதனைக்குள் தடுத்து வைத்திருந்து, அவர்கள் மூலம் வெளித் தொற்று ஏற்பட இடமளிக் காமல் தடுத்து நடவடிக்கை எடுத்த சுகாதார, பாதுகாப்புத் துறை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உண்மையில் விதந்துரைக்கப்பட வேண்டியவர்கள். சிலாகித்து மெச்சப்பட வேண்டியவர்கள்.

ஆனால், கந்தக்காட்டுப் புனர்வாழ்வு நிலையத்தன் ஊடாக ஏற்பட்டிருக்கும் பரவல் இந்தக் கடற்படை முகாம் தொற்றுப் பரவல் தடுப்பினால் கிடைத்த வெற்றிக்கு ஆப்பு அடித்து விடுமோ என்று பலரும் அஞ்சுகின்றனர்.

வெலிசறைக் கடற்படை முகாம் பரவலைப் பொறுத்தவரை தொற்றுக்குள்ளானவர்கள் ஒரு படைக் கட்டமைப்புக்குள் கட்டுப்பட்டுச் செயற்படுகின்ற படையினர். அவர்களையும் அவர்களின் உறவினர் மற்றும் பழகியோரையும் கட்டுப்படுத்துவது, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது, சிகிச்சையளிப்பது, கண்காணிப்புக்குள் வைத்திருப்பது போன்றவை எல்லாம் இலகுவாக இயக்கக் கூடியவையாக இருந்தன.

ஆனால் கந்தக்காடு நிலைமை அப்படியல்ல. அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்போர் கையாள இலகுவானவர்கள் அல்லர். போதாக் குறைக்கு அவர்கள் மூலம் தொற்றைப் பெற்றுக் கொண்ட முகாம் ஆளணியினர் தாராளமாகப் பொது இடங்களில் பலருடனும் பழகியுள்ளனர்.

அந்தத் தரப்புகளினால் ஏற்பட்ட தொற்று சமூகப் பரவலாகவே மாறி விடும் ஆபத்து ஏது நிலைகள் தென்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

கடற்படை ஊடான தொற்றை அடக்கிய அரசு, கந்தக்காடு புனர்வாழ்வு முகாம் மூலம் பரவியுள்ள கொரோனாவை அடக்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு என்ன திட்டம் வைத்தி

## ஜனாதிபதி உட்பட யாரையும் கொல்வோம் என பூசா பாதாள உலகக் கைதிகள் அச்சுறுத்தலாம்

### விசாரணைகளை ஆம்பித்தது குற்றப் புலனாய்வுப் பிரிவு

பூசா சிறைச்சாலையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குற்றவாளிகள் ஜனாதிபதி உட்பட யாரை வேண்டுமானாலும் கொலை செய்வதற்கான திறன் தங்களுக்குள்ளது என தெரிவித்தமை குறித்துக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எங்களிடம் துப்பாக்கிகள் உள்ளன, எங்கள் ஆட்கள் வெளியில் உள்ளனர், எங்களை சிறையில் வைத்திருப்பதை தவிர வேறு எதனையும் உங்களால் செய்ய முடியாது என முக்கிய குற்றவாளிகள் சிலர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

நாங்கள் உங்கள் அனைவரையும் கொலை செய்வோம், சிறைச்சாலைத் தலைவர், பாதுகாப்பு செயலாளர், ஏன் தேவைப்பட்டால் ஜனாதிபதியைக் கூடக் கொலை செய்வோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் பதவி எங்களுக்கு ஒன்றும் முக்கியமானதல்ல, அவர் ஐந்து வருடங்களே பதவியிலிருப்பார் என முக்கிய குற்றவாளிகள் சிலர் சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

கொஸ்கொட தாரக என்ற பாதாள உலகக் குற்றவாளியும், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களைச் சேர்ந்தவர்க ளும் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் மற்றும் சிறைச்சாலைப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஆகியோரின் வாக்கு மூலங்களை சி.ஐ.டியினர் நேற்றுப் பதிவு செய்துள்ளனர்.

குறிப்பிட்ட குற்றவாளிகள் உண்ணா விரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை அவர்களைப் பார்வையிடுவதற்காக சிறைச்சாலை அதிகாரிகள் சென்றவேளை இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகள் இது குறித்து பாதுகாப்பு செயலாளர் உட்பட முக்கிய அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

## நாவிதன்வெளி சவளக்கடைப் பகுதியில் இன்று காலை புகுந்த தனியன் யானை!

### அதிகாரிகள் ஒன்று கூடி விரட்ட நடவடிக்கை



ஊருக்குள் திடீரென நுழைந்த யானை ஒன்றினை விரட்டியடிக்கும் நடவடிக்கை ஒன்று தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேசசெயலகத்திற்கு உட்பட்ட சாளம்பைக்கேணி, சவளக்கடை, அன்னமலை பகுதியில் இன்று காலை பெரிய தனியன் யானை ஒன்று உட்புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டிருந்தது.

இதனை அடுத்து பொதுமக்கள் அந்த யானையை சீனவெடிகளைப் பயன்படுத்தி விரட்ட முற்பட்டனர்.

யானையும் பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் நடமாடியதுடன் அறுவடை மேற்கொள்ளத் தயாராக இருந்த நெற்கதிர்களை உண்டு அருகில் உள்ள நாணல் காட்டில் சென்று மறைந்துள்ளது.

இவ்வாறு ஊருக்குள் பிரவேசித்து மக்களை அச்சுறுத்திய யானை தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், நாவிதன்வெளி பிரதேச உதவி பிரதேச செயலாளர் என். நவநீதராஜா மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் குழுவினர், வனஜீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர்.

அத்துடன் குறித்த யானை மக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாத வகையில் மீண்டும் காடுகளிற்குள் விரட்ட நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதேச செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.



அண்மைக்காலமாக யானைகளின் அட்டகாசம் அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றமையம் குறிப்பிடத்தக்கது.

## மாதாந்தம் கையூட்டுப் பெற்று வந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் கைது

மாதாந்தம் 5,000 ரூபா கையூட்டுப் பெற்று வந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான குறித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர், மிரிஹான பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் கடமையாற்றுபவர் என விசாரணை பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்த வழக்கிலிருந்து விடுதலையான நபர் மீது மீண்டும் வழக்கு தொடர்வதாக தெரிவித்து சந்தேக நபர் மாதாந்தம் 5,000 ரூபா இலஞ்சம் பெற்று வந்துள்ளார்.

## 'செல்பி' எடுக்க முற்பட்டவர் நீர் வீழ்ச்சியில் வீழ்ந்து சாவு

*தனது காதலியுடன் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் நீர் வீழ்ச்சியில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*குறித்த நபர் அங்குள்ள கல் ஒன்றின் மீது ஏறி 'செல்பி' எடுக்க முற்பட்ட போது கால் தவறி விழுந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*வெள்ளவத்தைப் பகுதியை சேர்ந்த 35 வயதுடையரத்னராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*உயிரிழந்த நபரின் காதலி கொழும்பில் பிரதான வைத்திய சாலை ஒன்றின் வைத்தியர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

# மேற்கு வங்கத்தில் மாணவி மரணித்த இடத்திற்கு அருகே மாணவன் உடல்

மேற்கு வங்க மாநிலம் வடக்கு தினாஜ்பூர் மாவட்டத்தில், பெரும் வன்முறைக் களேபரங்கள் நிகழக் காரணமான மாணவியின் மரணத்தை விசாரிக்கும் பொலிஸார் குளம் ஒன்றில் இருந்து 16 வயது மதிக்கத்தக்க



மாணவனின் உடலை மீட்டனர்.

மாணவியும், மாணவனும் ஒன்றாகப் படித்தவர்கள் என்றும் மாணவியின் பெற்றோர் தமது மகனைக் கொலை செய்துவிட்டனர் எனவும் அவனது தாயார் தெரிவித்துள்ள நிலையில், மகளைக் கடத்திப் பலாத்காரம் செய்து மாணவன் கொன்று விட்டான் என மாணவியின் தந்தை புகார் அளித்துள்ளார்.

இந்த நிலையில் 2 பேரும் அடுத்தடுத்த இடங்களில் சடலங்களாகக் காணப்பட்டமை குறித்து பல கோணங்களில் விசாரிப்பதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

## வேலூர் சிறையில் நளினி தற்கொலைக்கு முயன்றார்

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் நளினி நேற்றிரவு தற்கொலை செய்து கொள்ள முயன்றார் என அவரின் வழக்கறிஞர் புகழேந்தி கூறியுள்ளார்.

இது குறித்து நளினியின் வழக்கறிஞர் புகழேந்தி கூறுகையில் -



"கடந்த 29 ஆண்டுகளாக வேலூர் சிறையில் நளினி அடைக்கப்பட்டுள்ளார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த மற்றோரு ஆயுள் கைதிக்கும் நளினிக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இந்ததகராறுதொடர்பாக ஜெயிலர் அல்லிராணியிடத்தில் அந்த கைதி புகார் கூறியுள்ளார். நேற்றிரவு ஜெயிலர் அல்லிராணி லாக்கப்புக்கு வெளியே நின்றவாரே நளினியிடத்தில் விசாரணை நடத்தியுள்ளார்.

"இதனால், மனவருத்தமடைந்த நளினி விசாரணை நடந்து கொண்டிருந்த போதே தூக்கு போட முயன்றுள்ளார். தொடர்ந்து, ஜெயிலர் அல்லிராணி உள்ளே சென்று நளினியின் தற்கொலை முயற்சியை தடுத்து காப்பாற்றினார். சிறையில் இருந்த 29 வருடங்களில் நளினி தற்கொலைக்கு முயன்றதில்லை. ஆனால், தற்கொலை செய்ய முயன்றதற்கு இது மட்டும்தான் காரணமா அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா எனத் தெரியவில்லை" - என்றார்.

கடந்த 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் நளினி, அவரின் கணவர் முருகன் உள்ளிட்ட 7 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். வேலூர் சிறையிலிருந்து தன்னை சென்னை புழல் சிறைக்கு மாற்ற வேண்டுமென நளினி பல முறை வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அவரை புழல் சிறைக்கு மாற்றப்படவில்லை. இதனாலும் நளினி மன உளைச்சலில் இருந்தார் எனச் சொல்லப்படுகிறது.

### பாபர் மசூதி இடிப்பு வழக்கில்
## வெள்ளியன்று காணொலி மூலம் அத்வானியின் வாக்குமூலம் பதிவு

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானியின் வாக்குமூலத்தை வரும் 24 ஆம் திகதி சிறப்பு நீதிமன்றம் பதிவு செய்ய உள்ளது.

பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக, உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் விசாரணையை முடிக்க சிறப்பு நீதிமன்றம் தினசரி விசாரணை நடத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக முன்னாள் சிவசேனா எம்.பி. சதீஷ் பிரதான் வாக்குமூலத்தை காணொலிக் காட்சி மூலம் நாளை பதிவு செய்ய உள்ளது. இதனைத்தொடர்ந்து 23 ஆம் திகதி முரளிமனோகர் ஜோஷியின் வாக்குமூலமும், 24 ஆம் திகதி அத்வானியின் வாக்குமூலமும் காணொலிக் காட்சி மூலம் பதிவு செய்யப்படும் என சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.கே. யாதவ் தெரிவித்துள்ளார்.

## சுகாதாரத்துறைச் செயலாளரின் குடும்பத்தவருக்கும் கொரோனா



தமிழகத்தில் சுகாதாரத் துறை செயலர் ராதாகிருஷ்ணனின் குடும்பத்தினர் 4 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமது மாமனார், மாமியார் ஆகியோருக்கு வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து, குடும்பத்தினருடன் ராதாகிருஷ்ணன் பரிசோதனை செய்து கொண்டார். இதில் அவருடைய மனைவி மற்றும் மகனுக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டதால் அவர்கள் கிங்ஸ் கொரோனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனை ராதாகிருஷ்ணன் ட்விட்டர் மூலம் அளித்த பதில் ஒன்றில் தெரிவித்துள்ளார். இதனிடையே, குடும்பத்தினர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமையால் ராதாகிருஷ்ணனும் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

### வானில் நிகழும் மிக அரிதான நிகழ்வு!
## ஐந்து கோள்களை ஒரே வேளையில் வெற்றுக் கண்களால் பார்க்கலாம்..!

மிகவும் அரிதான வானியல் நிகழ்வாக, வரும் சில நாள்களில், உலகின் பல்வேறு பகுதிகளில் ஐந்து கோள்களை வெறும் கண்களால் பார்க்க முடியும் என்று ஆந்திர மாநில விஞ்ஞானி பி.ஜி.சித்தார்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பேசிய அவர், வரும் சில நாள்களில் மிகவும் அதிசயிக்கத்தக்க வானியல் நிகழ்வு நடைபெற உள்ளதாக தெரிவித்தார். மாலை முதல் அதிகாலை வரை ஐந்து கோள்களை வெறும் கண்களால் பார்க்க முடியும் என்றும் ஹைதராபாத் உள்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் இடங்களிலும் இதனைப் பார்க்க முடியும் என்றும் கூறினார்.

புதன், செவ்வாய், வியாழன், சனி உள்ளிட்ட ஐந்து கோள்கள் வரும் நாள்களில் மாலை முதல் அதிகாலை வரை அதாவது சூரியன் மறைந்த பிறகு வெறும் கண்களால் பார்க்க முடியும் என்றார்.

# தாய்ப்பால் புட்டிகளை தினசரி ஆயிரம் கி.மீ. தூரம் விமானத்தில் எடுத்து வந்து சிசுவைக் காப்பாற்றினர்

## புதுடில்லி மருத்துவமனையில் நடந்த போராட்டம் வெற்றி



லடாக்கில் தாய். ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவில் டெல்லியில் மகன். தினசரி விமானத்தில் வந்த தாய்ப்பால் புட்டிகள். 35 நாள்கள் தொடந்த இந்தப் போராட்டத்தின் பின்னர் குழந்தை உயிர் பிழைத்த அதிசயம் நடந்திருக்கின்றது.

லடாக் தலைநகர் லேவை சேர்ந்தவர் ஜிக்மெத் வாங்டு. இவரின், மனைவி டோர்ஜே பால்மா நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார். கர்நாடகா, மைசூரில் உள்ள பள்ளியில் ஜிக்மெத் வாங்டு ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். இந்த நிலையில், கடந்த ஜூன் 16 ஆம் திகதி டோர்ஜே பால்மாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால், குழந்தை பிறந்தது முதலே பால் குடிக்க மறுத்தது. தொடர்ந்து, டெல்லியிலுள்ள மேக்ஸ் மருத்துவமனையில் குழந்தையை அனுமதிக்க லே மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். டோர்ஜே பால்மாவின் சகோதரர் கடந்த 18 ஆம் திகதி குழந்தையை டெல்லி மருத்துவமனையில் அனுமதித்தார். அதேவேளையில், குழந்தையின் தந்தை ஜிக்மெத் வாங்டுவும் மைசூரிலிருந்து டெல்லி மருத்துவமனைக்கு சென்றடைந்தார்.

மேக்ஸ் மருத்துவமனையில் குழந்தையை பரிசோதித்த போது, உணவுக்குழாயில் பிரச்சினை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக, 19 ஆம் திகதியே குழந்தைக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதேவேளையில், 'அறுவை சிகிச்சை செய்திருப்பதால், குழந்தைக்கு தாய்ப்பால் கிடைத்தால் இந்த நேரத்தில் நல்லது. அதனால், தாய்ப்பால் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்...!' என்று ஜிக்மெத் வாங்விடத்தில் மருத்துவர்கள் அறிவுறுத்தினர். ஆனால், குழந்தையின் தாய் டோர்ஜே பால்மா லடாக்கில் லேவில் இருந்தார். இதனால், என்ன செய்வதென்று தெரியாமல் ஜிக்மெத் வாங்டு யோசித்தார். அப்போது, லே விமான நிலையத்தில் பணி புரிந்த தன் நண்பர்கள் சிலர் குறித்து அவருக்கு நினைவுக்கு வந்தது.

உடனடியாக, அவர்களைத் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். நண்பர்கள் உதவியதால், லேவிலிருந்து தினமும் டெல்லி விமான நிலையத்துக்கு தாய்ப்பால் கொண்டு செல்ல விமான நிறுவனங்கள் முன் வந்தன. குழந்தையின் நலனைக் கருத்தில் கொண்டு இலவசமாகவே விமான நிறுவனங்கள் இந்த சேவையை செய்தன. கடந்த 35 நாள்களாக தினமும், 1000 கிலோ மீற்றர் தொலைவிலிருந்து மனைவி கொடுத்து விடும் தாய்ப்பால் புட்டிகளை டெல்லி இந்திரா காந்தி விமான நிலையத்துக்கு சென்று ஜிக்மெத் வாங்கு வாங்கிக் கொள்வார். பிறகு, மருத்துவமனையில் செவிலியர்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் புகட்டுவார்கள். காலியான புட்டிகளை மீண்டும் லேவுக்கு விமானம் வழியாக கொடுத்து விடுவார் ஜிக்மெத். தாய்ப்பால் குடித்ததால், தற்போது, குழந்தையின் உடல்நிலை நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இன்னும் இரு நாள்களில் குழந்தை வீடு திரும்புவுள்ளது.

இது குறித்து மேக்ஸ் மருத்துவமனை குழந்தைகள் நல மருத்துவர் ஹர்ஸ்வர்த்தன் கூறுகையில், "இது போன்ற சிக்கலான அறுவை சிகிச்சைகள் குழந்தை பிறந்த 48 மணி நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். அதனால்தான், மிக விரைவாக அறுவை சிகிச்சைக்கு நாள் குறித்தோம். இப்போது, குழந்தை நன்றாக குணமடைந்து விட்டான். செவிலியர்களைப் பார்த்து சிரிக்கிறான். கைகால்களை அசைத்து விளையாடுகிறான் " என்றார்.

குழந்தையின் தந்தை ஜிக்மெத் வாங்டு, "என் நண்பர்களால்தான் என் குழந்தைக்கு தினமும் தாய்ப்பால் கிடைத்தது. இப்போது, குழந்தை குணமாகியிருக்கிறான். அதற்காக, டாக்டர்களுக்கும் , நண்பர்களுக்கும் விமான நிறுவனங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்கிறார் மகிழ்ச்சியுடன்.

# செவ்வாய்க் கிரகத்தை நோக்கி எமிரேட்ஸின் ‘நம்பிக்கை’ பயணம்



அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகியவை மட்டுமே இதுவரை செவ்வாய்க் கிரகத்தை நோக்கி விண்கலன்களை ஏவியுள்ளன. பல நாடுகளும் தயங்கும் வியம் செவ்வாய் கிரக பயணம். ஆனால், விண்வெளித் துறையில் எந்தவித முன் அனுபவமும் இல்லாத ஐக்கிய அரபு அமீரகம் செவ்வாய் கிரகத்தை நோக்கித் தனது செயற்கைக் கோளை வெற்றிகரமாக ஏவியுள்ளது. கொரோனா நோய்ப் பரவலுக்கு மத்தியில் பல்வேறு நாடுகள் விண்வெளி திட்டத்தை ஒத்திவைத்துள்ள சூழலில் இந்த சாதனையை அமீரகம் நிகழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

திங்கள்கிழமை, அதிகாலை நேரத்தில் ஜப்பான் நாட்டின் 'தனேகாஷிமா' விண்வெளி ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாகச் செவ்வாய் கிரகத்தை நோக்கிய பயணத்தைத் தொடங்கியது, ஐக்கிய அரபு அமீரகத்தின் 'அல் அமால்' செயற்கை கோள். அரேபிய



மொழியில் அல் அமால் என்றால் நம்பிக்கை என்று அர்த்தம். ராக்கெட் ஏவப்பட்ட ஒரு மணி நேரத்திலேயே தனது முதல் சிக்னலை துபாயிலுள்ள முகம்மத் பின் ரஷித் தரைக்கட்டுப்பாட்டு மையத்துக்கு அது அனுப்பி வைத்தது. இதையடுத்து, வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர் அமீரக விஞ்ஞானிகள்.

அல் அமால் செயற்கைக்கோள் 1.3 தொன் எடை கொண்டது. இது முழுக்க முழுக்க ஐக்கிய அமீரகத்தால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. விண்ணில் ஏவுவதற்கு மட்டும் ஜப்பான் நாட்டின் உதவி அமீரகம் நாடியது.

வரும் 2021 பெப்ரவரி மாதத்தில் ஐக்கிய அரபு அமீரகம் உருவானதன் 50 ஆம் ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. இதே ப்ரவரி மாதத்தில்தான் அல் அமால் செவ்வாய் கிரகத்தின் சுற்று வட்டப் பாதையை அடைந்து விடும். இந்த செயற்கைக் கோள் செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றியபடி செவ்வாய் கிரகத்தின் வானிலை மற்றும் காலநிலையை ஆராய்ச்சி செய்யும் என்று கூறப்படுகிறது.

புவி வட்டப் பாதையைவிட்டு விலகியதும், செவ்வாய் கிரகத்தை நோக்கிய 49 கோடி 50 லட்சம் கி.மீ பயணம் முழுவதும் சூரிய சக்தியைக் கிரகித்து, பேட்டரி வழியாக இயங்கும். ரூ. 1,500 கோடி இந்திய மதிப்பீட்டில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்



ளது அமீரகம். இதன் மூலம், அரேபிய மண்ணிலிருந்து புவி வட்டப்பாதையைக் கடந்து விண்வெளிக்கு செயற்கைக்கோளை ஏவிய முதல் நாடு என்ற பெருமையை அமீரகம் பெற்றுள்ளது.

சொந்தமாகச் செவ்வாய் கிரகத்துக்குச் செயற்கைக் கோளைத் தயாரித்து ஏவப் போகிறோம் என்று அமீரகம் சொன்ன போது உலக நாடுகள் அனைத்தும் ஆச்சரியத்துடன் பார்த்தன.

ஆறு வருடங்களுக்கு முன்பு இந்தத் திட்டம் யோசனை வடிவில் இருந்தபோதே அமீரக அரசு ஒன்றை வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டது. இந்த விண்கலத்தை நாம் வேறு நாடுகளிடம் வாங்கப்போவதில்லை. நாம்தான் தயாரிக்கப் போகிறோம். இது தொடர்பான அனுபவம் மற்றும் கல்வியறிவுக்கு மட்டுமே மற்ற நாடுகளை சார்ந்திருக்கப் போகிறோம்



என்று தெளிவாக அந்த நாடு கூறியது.

இது தொடர்பாக, விண்வெளி ஆய்வுகளுக்கான கருவிகள் வடிவமைப்பில் முன் அனுபவம் உள்ள கொலராடோ பல்கலைக்கழகம், அரிசோனா மாநில பல்கலைக்கழகம் மற்றும் கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்க்லி உள்ளிட்ட அமெரிக்காவின் பல்வேறு கல்வி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் ஐக்கிய அரபு அமீரக விஞ்ஞானிகள் குழுவால் ஏற்கெனவே இருக்கும் சோதனை உள்கட்டமைப்பைப் பயன்படுத்தவும், அனுபவமிக்க விண்வெளி பொறியாளர்களிடமிருந்து அறிவைப் பெற்று ஆறு ஆண்டு காலத்தில் இந்த சாதனையை அமீரகம் படைத்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபரான கே் கலீபா, இந்தத் திட்டத்தில் திறமையுடன் உழைத்த அனைவருக்கும் தனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டிருப்பதன் மூலம் அரேபிய இளைஞர்களை விண்வெளி துறையில் ஊக்குவிக்க முடியும் என்று நம்புகிறது அமீரகம். மேலும், செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இல்லை. ஆனால், தண்ணீரின் அடிப்படை மூலக்கூறான ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகிய இரண்டும் தொடர்ந்து வெளியேறிக்கொண்டே இருக்கிறது. இது எப்படி என்பதை ஆய்வு செய்யவும், செவ்வாய் கிரகத்தின் காலநிலையைப் பற்றி ஆய்வு செய்யவும் அல் அமால் செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளது.

இது மட்டுமல்லாமல், வெறும் எண்ணெய் வளத்தை மட்டும் சார்ந்திருக்க அமீரகம் விரும்பவில்லை. எதிர்காலத்தில் செயல்படுத்தப் பல திட்டங்களைக் கையில் வைத்துள்ளது. அதில் ஒன்றுதான் இந்த செவ்வாய் கிரகத்தை நோக்கிய 'நம்பிக்கை' திட்டம்!

## ஆக ஆயிரம் பேருக்கு மட்டுமே இந்த ஆண்டு ஹஜ்ஜில் அனுமதி



வரும் 31 ஆம் திகதி தொடங்க உள்ள ஹஜ் சடங்குகளில் சவூதியில் இருக்கும் பல வெளிநாட்டவர் உட்பட சுமார் 1000 பேர் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் என சவூதி அரேபிய அரசு தெரிவித்துள்ளது.

வழக்கமாக 25 லட்சம் பேர் கூடும் ஹஜ்ஜில், கொரோனா தொற்றுக் காரணமாக இந்த ஆண்டு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக ஹஜ் அமைச்சர் முகம்மது பென்டன்ரியாதில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வேறு எந்த நோயும் இல்லாத 65 வயதிற்கும் குறைவான நபர்கள் ஹஜ்ஜில் பங்கேற்க தேர்வு செய்யப்படுவர்கள் என கூறிய அவர், மெக்காவிற்கு வருவதற்கு முன்னால் அவர்களுக்கு கொரோனா சோதனை நடத்தப்படும் என்றும், 5 நாள் ஹஜ் சடங்குகளுக்குப்பிறகு அவர்கள் வீட்டுத்தனிமையில் இருத்தல் அவசியம் என்றும் தெரிவித்தார்.

வளைகுடா நாடுகளிலேயே மிகவும் அதிகமாக சவூதியில் கொரோனா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 60 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

## ஈரானில் தளபதி காட்டிக் கொடுத்த நபர் தூக்கில் போடப்பட்டாராம்!

ஈரான் தளபதி சுலைமானி இருக்குமிடம் குறித்து உளவு சொன்னவருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

இராணுவத் தளபதி சுலைமானி குறித்து அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளுக்கு தகவல் கொடுத்தார் என மஹ்மூத் மவ்சாவி மஜித் என்பவரை ஈரான் கடந்த மாத இறுதியில் கைது செய்திருந்தது. சி.ஐ.ஏ. மற்றும் மொசாட் உளவு அமைப்புகளில் பணியாற்றிய இவர், சுலைமானியின் வாகனப் பயணம் குறித்த தகவல்களை அமெரிக்காவுக்கு வழங்கினார் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பான நீதிமன்ற விசாரணையின் போது அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு நேற்று அது நிறைவேற்றப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் ஈரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமானி கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மூன்று தடுப்பூசி நிறுவனங்களிடம் இருந்து ஒன்பது கோடி கொரொனாத் தடுப்பூசிகள்

### வாங்குவதற்கு பிரிட்டன் தீர்மானம்

மூன்று மருந்து நிறுவனங்கள் நம்பிக்கை அளிக்கும் விதமாக கொரோனா தடுப்பூசிகளை உருவாக்கிவரும் நிலையில், அவற்றிடம் இருந்து 9 கோடி தடுப்பூசிகளை முதலில் வாங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக பிரிட்டன் வர்த்தக அமைச்சர் அலோக் சர்மா தெரிவித்துள்ளார்.

ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்டு ஆஸ்ட்ராஜெனேகாவால் தயாரிக்கப்பட உள்ள தடுப்பூசி, லண்டன் இம்பீரியல் கல்லூரியால் கண்டுபிடிக்கப்பட்டு ஃபைசர் நிறுவனம் உற்பத்தி செய்ய உள்ள தடுப்பூசி மற்றும் வால்நேவா நிறுவனத்தின் தடுப்பூசி ஆகிய மூன்றையும் முதலிலேயே கொள்முதல் செய்ய முடிவெடுத்து அதற்கான ஒப்பந்தங்களை பிரிட்டன் அரசு போட்டுள்ளது.

எவ்வளவு விரைவாக முடியுமோ, அந்த அளவுக்கு தடுப்பூசியை பிரிட்டன் மக்களுக்கு பயன்படுத்த உறுதி பூண்டுள்ளதாகவும் அலோக் சர்மா தெரிவித்துள்ளார்.

# ஏமாற்றுக்காரர்களுக்கு ஆகஸ்ட் 5இல் மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும்!

## கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சரவணபவன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜுலை 21

நீதிமன்றத்தையும், தேர்தல்கள் ஆணைக்குழுவையும் லாவகமாக ஏமாற்றும் டக்ளஸ் தேவானந்தா மக்களை ஏமாற்ற மாட்டார் என்று உறுதி கூற முடியுமா? இவர்களைப் போன்ற ஏமாற்றுக்காரர்களுக்கு மக்கள் ஓகஸ்ட் 5ஆம் திகதி தக்க பாடம் புகட்ட வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளருமான ஈ.சரவணபவன் வலியுறுத்தியுள்ளார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு ஏமாற்றுவதில் கைதேர்ந்தவர் டக்ளஸ் தேவானந்தா. 'உதயன்' பத்திரிகை வெளியிட்ட செய்திக்காக ஆயிரம் மில்லியன் ரூபா நட்டஈடு கேட்டு வழக்குத் தாக்கல் செய்தார் டக்ளஸ் தேவானந்தா. இந்த வழக்கு 2013 செப்டெம்பர் 16ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அன்று முறைப்பாட்டாளரான டக்ளஸ் கட்டாயமாக நீதிமன்றுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், நோய்வாய்ப்பட்டு பாதிக்கப்பட்டிருப்பதால், வெளியே நடமாட முடியாமல் இருப்பதால் நீதிமன்றத்துக்கு வர முடியவில்லை என்று அவரது சட்டத்தரணி, நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் அப்பட்டமான பொய்யைக் கூறினார்.

படுக்கையில் சுகமில்லாமல் இருந்த டக்ளஸ் அன்று யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் யாழ் பல்கலைக்கழக கல்லூரிக்கான அடிக்கல்லை நட்டார்.

அடிக்கல் நடும் விழாவில் அப்போதைய அமைச்சர் டலஸ் அழகப்பெரும, ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அன்று டக்ளஸின் வலதுகரமாக நின்ற சந்திரகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். அதை 'உதயன்' புகைப்படத்துடன் வெளிப்படுத்தியிருந்தது.

சில தினங்களுக்கு முன் மன்னாருக்குச் சென்ற டக்ளஸ் லியோன் தேவாலயத்தில் பங்குத் தந்தையின் தலைமையில் தேர்தல் பரப்புரை செய்துள்ளார். அதற்கான ஒளி, ஒலி நாடாக்களுடன் ஊர்வாசி ஒருவர் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அதைப் பரிசீலனை செய்த மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தேவாலயத்தில் தேர்தல் பரப்புரை இடம்பெற்றதை உறுதிசெய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் சம்பவத்தை அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலிஸார், டக்ளஸ் தேவாலயத்துக்குச் சென்றது உண்மை. ஆனால், அவர் சாமி கும்பிடத்தான் சென்றார் என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்பட்டுள்ளனர். ஆலயங்களில் சுவாமிக்குத்தான் மாலை போடப்படும்.



இங்கு டக்ளஸ் மாலை போட்டுக் கொண்டு ஒரு நாயகனாக அமர்ந்து பரப்புரை செய்வது ஊடகங்களில் புகைப்படத்துடன் வெளியாகின.

ஏழு வருடங்களின் முன் தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தை ஏமாற்றிய டக்ளஸ் ஏழு வருடங்களின் பின் பொலிஸாரைக் கொண்டு தேர்தல் ஆணைக் குழுவை ஏமாற்றியுள்ளார். இந்த டக்ளஸ் தில்லுமுல்லு செய்வதிலும் ஏமாற்றுவதிலும் கைதேர்ந்தவர். நீதிமன்றத்தையும், தேர்தல் ஆணைக்குழுவையும் ஏமாற்றிய அமைச்சர் டக்ளஸ் நாளை நம்பிய மக்களை ஏமாற்றமாட்டார் என்று கூற முடியுமா?. இப்படியான ஏமாற்றுக்காரர்களுக்கு மக்கள் சரியான தீர்ப்பை வழங்க வேண்டும் – என்றார்.

## கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய 906 கடற்படையினரும் குணமடைவு!

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து கடற்படை உறுப்பினர்களும் பூரண குணமடைந்துள்ளனர்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வந்த கடற்படையைச் சேர்ந்த கடைசி 03 உறுப்பினர்களும் நேற்று குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படையின் புதிய ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் ஜா – எல, சுதுவெல்ல பகுதியில், கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் போதைக்கு அடிமையான நபர் ஒருவரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்காகச் சென்ற கடற்படையைச் சேர்ந்த சிப்பாய்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தது.

அந்த நபருக்குக் கொரோனாத் தொற்று இருக்கின்றது எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது. 206 ஆவது நபராக அடையாளம் காணப்பட்ட இந்த நபரைத் தொடர்ந்து, குறித்த பணிக்காகச் சென்ற கடற்படையைச் சேர்ந்த சிப்பாய்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது அடையாளம் காணப்பட்டிருந்தது.

கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி, வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை உறுப்பினர் ஒருவர், திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமையைத் தொடர்ந்து, அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதியானது.

இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட கடற்படை உறுப்பினருடன் அதே உறைவிடம் மற்றும் அலுவலக இடங்களைப் பகிர்ந்து கொண்ட ஏனைய கடற்படை சிப்பாய்களும் மற்றும் அவருடன் தொடர்பைப் பேணிய அனைத்து நபர்களும் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட சோதனையில் முதலாம் நபர் உள்ளிட்ட 30 கடற்படையினர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதன் காரணமாக வெலிசறை கடற்படை முகாமும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல் 27 முதல் ஜூன் 23 வரை 2 மாதங்களுக்கு மேலாக வெலிசறை கடற்படை முகாம் தனிமைப்படுத்தப்பட்டு மூடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து வெலிசறை முகாமில் கடற்படையைச் சேர்ந்த 906 பேருக்கு கொரோனாத் தொற்று பரவியிருந்ததோடு, அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட அவர்களுடன் தொடர்புபட்ட 44 பேருக்கு கொரோனாத் தொற்று பரவியிருந்தது. இந்நிலையில், தற்போது அவர்கள் அனைவரும் குணமடைந்துள்ளனர்.

குணமடைந்த கடற்படை சிப்பாய்கள் வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறிய போதிலும், சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய, அவர்கள் மேலும் 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இறுதியாக குணமடைந்த கடற்படை உறுப்பினர்கள் மூவரும் இரணவில வைத்தியசாலையிலிருந்து நேற்றுக் குணமடைந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## சுயலாப அரசியல் நடத்தும் தமிழ் தலைமைகள் போல் தானும் இருந்து விட முடியாது என்கிறார் தேவானந்தா

யாழ்ப்பாணம்,ஜுலை21

காலத்திற்குக் காலம் வாக்குகளை அபகரிப்பதற்காக, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை கூறியும், தமது இயலாமையினால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விருப்பம் இன்றியும், அரசுகள் மீது மட்டுமே குறைகளை சுமத்தி, சுயலாப அரசியல் நடத்திவரும் தமிழ் தலைமைகள் போல் நானும் இருந்து விட முடியாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன், ஞானகலா சனசமூக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பிரதேச மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடிய பின் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில் –

மக்கள் அல்லலுறும்போது தமது சுயநலன்களுக்காக வெளிநாடுகளுக்கு ஓடிச்சென்றவர்களும் கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தாதவர்களும், சந்தர்ப்பங்களை உருவாக்க விரும்பாதவர்களும், அரசியல் அதிகாரங்களை மக்களின் நலனுக்காக வினைத்திறனோடு செயற்படுத்த இயலாதவர்களும், இன்று மக்கள் முன் மறுபடியும் வாக்குக் கேட்டு வருகின்றனர்.

தமிழர்கள் நடத்திய உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்களதும் இணக்க அரசியலின் பெயரால் ஏமாற்று அரசியல் நடத்தியவர்களதும் உண்மை முகங்களை மக்கள் இன்று அறிந்து கொண்டுள்ளனர். இதனால் மக்கள் மத்தியில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது.

இந்த மாற்றத்திற்கு தலைமை ஏற்கும் தார்மீக பொறுப்பானது இன்று எம் மீதே சுமத்தப்பட்டுள்ளது. அதை நான் ஏற்கின்றேன். மாற்றுத் தலைமை என்பது இந்த மக்களோடு மக்களாக வாழாமல், மக்களுக்கு வெளியே இருந்து வருபவராகவோ, கடந்த காலத்தில் நாம் முன்னெடுத்த உரிமைக்கான போராட்டத்தை தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்து, அதைத் தமது பிழைப்பிற்காக மாத்திரம் பயன்படுத்தி கொண்டவர்களாகவோ இருக்கமுடியாது.

மக்களோடு வாழ்ந்து, மக்கள் அனுபவித்த வலிகளிலும், துயரங்களிலும் பங்கெடுத்து, மக்களின் தேவையறிந்து செயற்படும் செயல் வீரரே மக்கள் தலைவராக திகழமுடியும்.

கடந்த காலங்களில் நான் வெளிப்படையாக மக்கள் நலன் கருதி முன்வைத்த கருத்துக்கள் உங்களை முழுமையாக வந்து அடையவில்லை. அதற்கு சில தடைகள் இருந்தமையம் நான் மறுக்கவில்லை.

அந்தவகையில் நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக அமையட்டும். சரியான பாதையில் பயணிக்க எம்முடன் அணிதிரண்டு வாருங்கள். – என தெரிவித்த அமைச்சர் வீணைக்கு வாக்களித்து உங்களை நீங்களே பலப்படுத்திக் கொள்ளுங்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## திருகோணமலையில் வெவ்வேறு இடங்களில் கேரளக் கஞ்சாவுடன் ஐந்து பேர் கைதாகினர்

திருகோணமலை, ஜுலை 21

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெவ்வேறு பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பகுதியில் கேரளக் கஞ்சா வைத்திருந்த ஐவரை நேற்று மாலை தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை, கோமரங்கடவெல, சீனக்குடா மற்றும் கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 42, 34, 40, 27 மற்றும் 25 வயதுடைய ஐவரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருநூறு மில்லிகிராம் கேரள கஞ்சா வைத்திருந்த இருவரையும் –

கோமரங்கடவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 100 மில்லிகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவரையும் –

சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 200 கிராம் கேரள கஞ்சா வைத்திருந்த நிலையில் ஒருவரையும் –

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐம்பது கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவரையும் –

தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கொரோனா அனர்த்த நிலைமைகளைப் பயன்படுத்தி தமிழர்கள் அதிக பிள்ளைகளைப் பெற முயலுங்கள்!

## முஸ்லிம்களை விட கூடப் பெற வேண்டும் என கருணா ஆலோசனை



கொரோனா அனர்த்த நிலைமையை பயன்படுத்தி தமிழர்கள் முஸ்லிம்களை விட அதிகளவான பிள்ளைகளை பெற முயற்சிக்க வேண்டும் என விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா அம்மான் ) அறிவுரை கூறியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணை பகுதியில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணித் தலைவரும் அகில இலங்கை தமிழர் மகாசபை சார்பாக திகாமடுல்லதேர்தல்மாவட்டத்தில்களமிறங்கியுள்ள தலைமை வேட்பாளருமாகிய கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவருமான குணசேகரம் சங்கர் உள்ளிட்டோரை வரவேற்று நடத்தப்பட்ட பிரசார கூட்டம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு கருணா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணி ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்துவதற்கும் தமிழர்களின் இருப்பைப் பாதுகாப்பதற்குமாகவே அம்பாறை மாவட்டத்தில் நான் போட்டியிடுகிறேன். அடுத்ததாக அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து செல்வதும் என் நோக்கம். படித்த இளைஞர்கள் கூடுதலாக வேலையற்றவர்களாக உள்ள இடம் அம்பாறை மாவட்டமாகும். இந்நிலை ஏற்படக்காரணம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகும். 25 வயதுடைய இளைஞன் 3 தடவை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களிப்பானால் ஆயின் 35 வயது அடைந்து மரக்கறி விற்பதற்கே அவன் செல்ல வேண்டும். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக செய்து வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை சேர்ந்தவர்கள் இனிவரும் காலங்களில் தேசியம் என்பதை கதைப்பதற்கு அருகதையற்றவர்கள். நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் கலையரசன் என்பவர் ஒரு குட்டி சம்பந்தன். இவர் நாவிதன்வெளி பிரதேச சபையினை மாற்று சமூகத்தினருக்கு தாரை வார்த்து விட்டார்.

சுமந்திரன் என்பவர் ஒரு குள்ள நரி. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை அழித்ததில் இவர் பெரும்பங்கு வகித்தவர். இவர்கள் அமைச்சுப் பதவிகளை எதிர்காலத்தில் எடுத்து மக்களுக்கு சேவையாற்றுவோம் என ஏமாற்ற முயற்சிக்கின்றனர். இதுவரை எடுக்காத அமைச்சு பதவிகளை இனிவரும் காலம் பிரதமர் இவர்களுக்கு கொடுப்பாரா ? உதை தான் விழும் என நினைக்கின்றேன்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக நான் கதைக்கவில்லை. முஸ்லிம் தலைவர்கள் தான் எமது மக்களிற்கு எதிரிகள். தமிழர்கள் தனக்கு பின்னால் பைல் தூக்கி வர வேண்டும் என கூறிய அதாவுல்லாஹ் என்பவர் ஆசிரியர் தொழில் எடுப்பதற்குக் குதிரை ஓடிக் கொடுத்தவரே ஒரு தமிழர் தான். எனவே இவரைப் போன்றவர்களுக்கு இனி படிக்கற்களால்தான் மண்டையில் எறிய வேண்டும்.

இத்தேர்தலானது எமது அம்பாறை மாவட்டத்தில் எமது இருப்பை பாதுகாக்கும் தேர்தலாகும். எமது இனத்தைப் பாதுகாக்க சகலரும் முயற்சிக்க வேண்டும். எதிர்காலத்தில் எமது சந்ததிகளை நாம் பாதுகாக்க கொரோனா அனர்த்த நிலைமையைப் பயன்படுத்தி அதிகளவான பிள்ளைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். சிங்களவர்கள், தமிழர்கள் தலா இரு பிள்ளைகளைப் பெறுவதுடன் நின்று விடுவார்கள். ஆனால் முஸ்லிம்கள் ஜப்பான் (மீன்) குஞ்சு மாதிரிப் பிள்ளைகளை பெற்று வருகின்றார்கள். எனவே இனியாவது ஒருவர் 4 குழந்தைகளாவது பெறுங்கள். தற்போது நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கொரோனா அனர்த்தத்தினால் தனிமைப்படுத்தல் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. - என்றார்.

## மது போதையில் வாகனம் செலுத்திய மேல் மாகாணத்தில் 100 பேர் கைது

மேல் மாகாணத்தில் மது போதையில் வாகனம் செலுத்திய 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 9.00 மணிமுதல் இன்று அதிகாலை 04.00 மணிவரை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 100 வாகனங்களும் காவல் துறையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என மேல் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 90 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## சுற்றுவளைப்புகளில் 1,630 பேர் மாட்டினர்!

ஞாயிற்றுக்கிழமை (19) நள்ளிரவு 12 மணி முதல், திங்கட்கிழமை (20) நள்ளிரவு 12 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது, பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 1,630 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், வெடிபொருள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 309 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டுகளில் 641 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 238 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 140 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தகுற்றச்சாட்டில் 12 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 10 பேரும், வெடிபொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 02 பேரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 278 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது ரிபீட்டர் வகை துப்பாக்கி 01, நாட்டுத் துப்பாக்கிகள் 03, கத்திகள் 02, தோட்டாக்கள் 123 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின்போது கைக்குண்டுகள் 02, டெட்டனேட்டர்கள் 05 ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

7 ஆயிரத்து 659 லீற்றர் சட்டவிரோத மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்தோடு, ஹெரோயின், கஞ்சா, ஐஸ் போதைப்பொருள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகவே நல்லூர் உற்சவத்தில் பக்தர்களுக்கு அனுமதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை22

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய பங்கேற்க கூடிய பக்தர்களை வழிபாடுகளில் ஈடுபட அனுமதியளிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலன் தெரிவித்தார்.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் தொடர்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற மாநகர சபையின் விசேட சபைக் கூட்டத்திலேயே மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அந்த அமர்விலே ஆணையாளர் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

ஏனைய இடங்களின் நடவடிக்கை போன்று ஆரம்பத்தில் 50 பேருக்கான அனுமதியை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வழங்கியிருந்தார். இருப்பினும் முதல்வர் சார்பிலே குறைந்தது 300 பேருக்கான அனுமதியேனும் வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டதோடு ஆலய விவகாரம் தொடர்பில் பலராலும் சுகாதார அமைச்சில் இருந்து பிரதமர் வரையில் கொண்டு செல்லப்பட்டது.

இதன் பின்பு தற்போது சுகாதார முறைப்படி ஆலய தரிசண மரபுடன் சமுகமளிப்பவர்களை கொரோனா முன் எச்சரிக்கையுடன் அனுமதிக்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. எனவே அதன்போது ஒரு தொகை பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என நம்பலாம். இருப்பினும் காவடி , அங்கப் பிரதட்டை , அடியடித்தல் போன்ற நேர்த்திக் கடன்களிற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலமையே இதுவரை கானப்படுகின்ற போதும் சுகாதார முன்னேற்றம் கண்டால் மேலும் சில விடயங்கள் அனுமதிக்கப்பட கூடும். மாறாக கொரோனா பரவல் ஏற்பட்டால் இறுக்கமான நிலைமையும் ஏற்படக்கூடும். எது எவ்வாறு இருப்பினும் திருவிழா நடக்கும். – என்றார்.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னேற்பாடுகளையும் மாநகர சபை மேற்கொள்ள சபை முழு அனுமதியை வழங்கியது.

## நாடெங்கும் மழைக்கான சாத்தியம்!

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில், பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ விருத்தியடையக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அத்தோடு மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். எனவே, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## உடன் அமுலாகின்ற வகையில் 17 பொலிஸாருக்கு இடமாற்றம்

உடன் அமுலுக்கு வரும் வகையில் 17 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், 9 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், 4 பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் 2 பொலிஸ் பரிசோதகர்கள் உள்ளிட்ட 17 பொலிஸாருக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம், ஹட்டன், யாழ்ப்பாணம், சிலாபம் ஆகிய பொலிஸ் பகுதிகள், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, பிரதமர் பாதுகாப்புப்பிரிவு உள்ளிட்ட இடங்களுக்கு இவ்வாறு இடமாற்றம் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதிகளுக்கமைய குறித்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சேவையின் தேவையின் அடிப்படையில் குறித்த இந்த நியமனங்கள் சேவையின் தேவைக்கு உடனடியாக அமல்படுத்தப்படுகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ்க் கூட்டமைப்பை சிதைக்க முயற்சிகள்!

## வாக்குகளினால் பதிலடி கொடுக்க மக்களிடம் மாவை வேண்டுகோள்

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைவடையச் செய்வதற்காகப் பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதனை மக்கள் வாக்குகளினால் பதிலடி கொடுத்துத் தடுக்கவேண்டும்.*

*- இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.*

மண்டைதீவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வந்ததுடன் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு வகையான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வந்துள்ளது.

தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலத்தில் என்ன செய்தது என்று கேட்கின்றன. நாங்கள் நல்லாட்சி அரசு அமைக்கப்பட்ட காலம் முதல் இறுதிவரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஓர் அரசமைப்பை உருவாக்குவதற்கு முழு ஒத்துழைப்பைச் செய்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தோம்.

அதுமட்டுமன்றி எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு வடக்கு, கிழக்கில் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு வேலைத்திட்டங்களை நாங்கள் செய்துள்ளோம். அவ்வாறான நிலையில் நாங்கள் முற்றுமுழுதாக எதையும் செய்யவில்லை என்றோ அல்லது முழுமையாகச் செய்து விட்டோம் என்றோ நாம் கூறவில்லை. பலவிதமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம் என்பதையே நாங்கள் கூறுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரித்தாள்வதற்காக – சிதைவடையச் செய்வதற்காக – பல தரப்புக்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த விடயத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் ஒருமித்து ஒரே பலமாக இருந்து செயற்படுவதன் மூலம்தான் மக்களுக்கானதைப் பெற்றுக்கொள்ளமுடியும் .

இன்றுள்ள சர்வதேச சந்தர்ப்பத்தை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.ஜனநாயகப் போராட்டம், ஆயுதப் போராட்டம் என மக்களுக்காகப் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எங்களுக்கு இருந்த மிகப் பலம் வாய்ந்த ஆயுதப் போராட்டம் இன்று இல்லை; இன்று இருப்பது ஜனநாயப் போராட்டமே. இதனை நாங்கள் பயன்படுத்த வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக நாங்கள் ஒருமித்துச் செயலாற்ற வேண்டும்.



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து இலங்கை அரசு விலகுவதாகக் கூறினாலும் அவ்வாறான நிலை ஏற்படாது. இந்தத் தீர்மானங்கள் ஒருவர், இருவரால் உருவாக்கப்பட்டது அல்ல. பல நாடுகளின் ஒத்துழைப்புடன் அதிலும் இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் கொண்டுவரப்பட்டது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கு அவர்களுக்குள்ள ஜனநாயகப் பலத்தை ஒருமித்துக் காண்பிக்க வேண்டும். இன்றைய ஜனாதிபதி சிங்களப் பௌத்த பெரும்பான்மையின் வாக்குகளால் ஆட்சியில் அமர்ந்துள்ளமையால் அத்தகையவர்களின் ஆட்சிக்கமைய புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும் எனக் கூறி வருகின்றார்கள். அவ்வாறான சந்தர்ப்பத்தை நாங்கள் வழங்கக் கூடாது.

எனவே, தமிழ் மக்கள் தங்கள் வாக்குப் பலத்தை சிதறடிக்காது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும். தேர்தல் தினத்தன்று நேரகாலத்துடன் வாக்களிக்கும் நிலையம் சென்று வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடி இடுவதுடன் விரும்பிய மூவருக்கும் புள்ளடியிட வேண்டும்." – என்றார்.

## கம்பஹா ஆசிரியருக்குத் தொற்று; மாணவர்கள் தனிமைப்படுத்தலுக்கு

கம்பஹா சுகாதார அத்தியட்சகர் அலுவலகம் மூலம் கொரோனா தொற்றுக்குள்ளான நபருடன் நெருங்கி செயற்பட்ட 101 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாக கம்பஹா சுகாதார வைத்திய அதிகாரி சுபாஸ் சுபசிங்க தெரிவித்துள்ளார்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையப் பாடசாலை ஆலோசகரே இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தார்.

அவர் கம்பஹாவில் பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு நடத்தியுள்ளார் என வைத்தியர் சுபாஸ் தெரிவித்துள்ளனர்.

அந்த மாணவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்பள்ளி ஆசிரியர்களை அழைத்து தேர்தல் பரப்புரை என முறைப்பாடு

*வன்னி தேர்தல் தொகுதியான மன்னார் மாவட்டத்தில் நேற்றுத் திங்கள் கிழமை வரை 34 தேர்தல் சட்ட மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் இதில் முன்பள்ளி ஆசிரியர்களை அழைத்துத் தேர்தல் பரப்புரை மேற்கொண்டமை தொடர்பான முறைப்பாடு ஒன்று எனவும் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் தெரிவித்தார்.*

*எதிர்வரும் ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக வன்னி தேர்தல் தொகுதியான மன்னார் மாவட்டத்தில் மன்னார் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு கடந்த மாதம் 21 ஆம் திகதியிலிருந்து திங்கள் கிழமை வரை 34 தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என அவர் தெரிவித்தார்.*

*இவற்றில் பெரும்பாலானவை சுவரொட்டிகள், ஸ்ரிக்கர்கள் ஒட்டுவது தொடர்பான முறைப்பாடுகளே. அந்த முறைப்பாடுகள் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றதும் பொலிஸாரின் உதவியுட அவை உடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.*

*இதேநேரத்தில் கடந்த 18.07.2020 சனிக்கிழமை அன்று ஒரு திணைக்களத்தின் அதிகாரியின் ஒத்துழைப்புடன் முன்பள்ளி ஆசிரியர்களை ஒரு கட்சி ஒன்றுத்திரட்டி தேர்தல் பிரசாரம் மேற்கொண்டுள்ளதாகத் தமக்கு முறையீடு கிடைக்கப் பெற்றுள்ளது எனவும்-*

*இது விடயமாகத் தற்பொழுது விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.*

## பொது சுகாதார பரிசோதகர்களின் பணிப் புறக்கணிப்பு தொடர்கிறது!

கொழும்பு, ஜூலை 21

பொது சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமது கடமையை ஆற்றக்கூடிய வகையில், சட்டப் பின்புலத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், தமது பணிப்புறக்கணிப்பு போராட்டத்திற்கு மேலும் 18 தொழிற்சங்கங்கள் ஆதரவு வழங்குவதற்கு தயாராகவுள்ளன என இலங்கைப் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார்.

தொற்றுநோய் மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே பொது சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் கடந்த மார்ச் மாதம் முதல் சுகாதார அமைச்சினால் இல்லாமலாக்கப்பட்டுள்ளது. அதேநேரம், பொதுத்தேர்தல் காலப்பகுதியில் பின்பற்ற வேண்டிய சுகாதார ஒழுங்கு விதிகள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அண்மையில் வெளியிடப்பட்டது.

எனினும் அதனை நடைமுறைப்படுத்தும்போது பொது சுகாதார பரிசோதகர்களுக்கு சட்ட ரீதியான அதிகாரம் வழங்கப்படவில்லை எனத் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. இதனையடுத்து, இந்த விடயங்களை அடிப்படையாகக்கொண்டு இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, கடந்த 19ஆம் திகதி முதல் டெங்கு காய்ச்சல் மற்றும் எலிக்காய்ச்சல் உள்ளிட்ட தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதுடன் தொடர்புடைய அனைத்து கடமைகளிலிருந்தும் அவர்கள் விலகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்த மீனவர் ஒருவருக்கு ரூ. 5,000 அபராதம்

**(தலைமன்னார் நிருபர்: வாஸ் கூஞ்ஞ)**

*மன்னார் அரிப்பு பகுதியில் சட்டபூர்வமற்ற முறையில் கடல் அட்டை பிடித்த மீனவர் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் அபராதம் செலுத்தியுள்ளார்.*

*கடந்த சனிக்கிழமை மன்னார் அரிப்பு கிழக்குப் பகுதியைச் சார்ந்த மீனவர் ஒருவர் சட்டபூர்வமற்ற முறையில் இரவு வேளையில் கடல் அட்டை பிடித்துக் கொண்டிருந்த வேளையில் அப்பகுதியிலுள்ள கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.*

*அத்துடன் இவர் பிடித்திருந்த 118 கடல் அட்டைகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன. சந்தேக நபரையும் மற்றும் கடல் அட்டைகளையும் கடற்படையினர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்திருந்தனர்.*

*சம்பந்தப்பட்ட இவ் மீனவரை சிலாபத்துறை மற்றும் நானாட்டான் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளான ஏ.ஜெயசீலன், இ.றொபின் ஆகியோர் மன்னார் மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் திங்கட்கிழமை ஆஜராக்கியபோது சம்பந்தப்பட்ட மீனவர் தனது குற்றைத்தை ஏற்றுக்கொண்டமையையடுத்து அவருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.*

*சந்தேக நபர் சார்பில் மன்னார் சிரேஷ்ட சட்டத்தரனி எஸ்.ஜெபநேசன் லோகு ஆஜராகியிருந்தார்.*

*கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகள் அரச உடமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவைகள் ஏலத்தில் விற்பதற்கான நடவடிக்கையை மன்னார் கடற்தொழில் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.07.2020 இல் வெளியிடப்பெற்றது.